பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 11 வெள்ளிக்கிழமை (28.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 302

# இராணுவ ரீதியில் வென்று புலிகளை அடக்கி பேச்சுக்குக் கூட்டிவருவது நடவாத காரியம்

## கோத்தபாயவுக்கு தளபதி சூசை பதில்

கிளிநொச்சி, செப்.28

எந்தக் காலத்திலும் இராணுவ ரீதியில் எங்களுடைய மண்ணை அடிபணிய வைக்க முடியாது என்பதை நாங்கள் இறுக்கமாகவும், தெளிவாகவும் கூறிவைக்க விரும்புகிறோம். இராணுவ ரீதியாக எங்களை வெற்றி கொண்டு, தோல்வியின் விளிம்புக்கு எங்களை இட்டுச் சென்று, எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம், பேச்சுக்குக் கூட்டி வரலாம் என்று அவர்கள் (அரசுத் தரப்பி னர்) கருதுவார்களேயானால் அது ஒரு காலமும் நடவாத காரியம். புலிகள் அப்படி ஒரு நிலைக்கு இறங்கவே மாட்டார்கள்.

-இப்படிக் கூறியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை.

இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, புலிகளின் பயங்கரவாதத்தை நூறு வீதம் வெற்றி கொண்ட பின்னர், அமைதிப்பேச்சு மூலம் தீர்வு காண்பது குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார். அதற்குப் பதிலடி தரும் விதத்திலேயே தளபதி சூசை தற்போது கருத்து வெளியிட்டியிருக்கின்றார்.

தாம் கடலில் விபத்தில் சிக்கியமை குறித்தும், அதில் தனது மகன் இறந்தமை குறித்தும் கூட அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

நேற்றுமுன்தினம், முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கோட்டத்தில் இடம் பெற்ற லெப்டினண்ட் கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரின் வணக்க நிகழ்வு மற்றும் 'சிறகு விரித்த புலிகள்' இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எங்களுடைய இனத்தின் விடுதலைக்காக, இனத்தினுடைய சுபீட்சத்திற்காக, இந்த 30 ஆண்டு கால போராட்ட வரலாற்றில் பல வெற்றிகளையும், பல திருப்பு முனைகளையும் ஏற்படுத்தியவர் எங்களுடைய தலைவர் பிரபாகரன்.

(07ஆம் பக்கம் பார்க்க)

# சுன்னாகம் சந்தை அருகே கிளைமோரில் நான்கு பொதுமக்கள் பலி! 20 பேர் காயம்!!

### மரக்கறி வாங்க வந்த பொலிஸ் வாகனம் இலக்கு?

யாழ்ப்பாணம், செப். 28

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அருகில் - மீன் சந்தைக்கு முன்பாக - நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் பொது மக்கள் நால்வர் கொல்லப்பட்டனர். இரண்டு பொலிஸார் உட்பட இருபது பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9.50 மணிக்கு சுன்னாகம் மரக்கறி மற்றும் மீன் சந்தைகளில் பொது மக்கள் அதிகமாகக் கூடியிருந்தவேளை இந்தக் கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சுன்னாகம் சந்தையில் மரக்கறி ஏற்ற வந்த பொலிஸ் வாகனத்தை இலக்கு வைத்தே இந்தக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கிளைமோர்த் தாக்குதலினால் அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் மூவர் அந்த இடத்திலேயே பலியானார்கள். இரண்டு பொலிஸார் உட்பட இருபதுபேர் காயமடைந்தனர். காயமுற்றவர்களில் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

சுன்னாகம் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் சுன்னாகத்தைச் சேர்ந்த செல்லையா அசோகன் (வயது 24), மீன் வியா

(08ஆம் பக்கம் பார்க்க)

## 2 மாணவர் உட்பட நால்வர் நேற்றுச் சரண்

யாழ்ப்பாணம், செப். 28

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இரு மாணவர்கள் உட்பட நால்வர் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

மீசாலையைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவன் ஒருவரும், கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 19 வயது மாணவன் ஒருவரும் அதே இடத்தைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரும் வரணி யைச் சேர்ந்த 49 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவருமே நேற்றுச் சரணடைந்துள்ளவர்களாவர்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

# அனைத்துக் கட்சிக் குழுவைக் கலைத்து வேறு குழுவை நியமிக்கவும் நேரலாம்

### அரசுத் தரப்பில் சூசகமாக அறிவிப்பு

கொழும்பு, செப். 28

"தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கக் காலதாமதமாகுவது போல், ஒரு கட்டத்தில் தேவைப்பட்டால் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவைக் கலைத்து விட்டு வேறு ஒன்றை நியமிக்கும் சூழ்நிலையும் ஏற்படலாம்."

- இவ்வாறு அரசுத் தரப்பின் நிலையை கோடி காட்டியிருக்கின்றார் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் செய்வது மிக இலகுவானது. எடுத்த எடுப்பில் அதைச் செய்யலாம். ஆனால், சமாதானத்தை இலகுவில் கொண்டுவர

(08ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டின் வெவ்வேறு இடங்களில் மூவர் சுட்டுக் கொலை; இருவர் குடும்பஸ்தர்கள்!

யாழ்ப்பாணம், செப். 28

குடாநாட்டில் வெவ்வேறு இடங்களில் மூவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் இருவர் இளம் குடும்பஸ்தர்கள்.

ஒருவர் புதன்கிழமை இரவு 9 மணியளவிலும் அடுத்தவர் நேற்றுக்காலை 6 மணியளவிலும் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை 7.30 மணிக்கும் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கோண்டாவிலில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான சொக்கலிங்கம் நாகலிங்கம் (வயது - 39) என்பவர் புதன்கிழமை இரவு 9 மணியளவில் தமது வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரது சடலம் நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரியில் மூன்று பிள்ளைகளின் தந்தையான செ.அகிலன் (வயது - 35) என்பவர் வீட்டுக்கு அருகில் உள்ள தமது வர்த்தக நிலையத்தை திறந்து கொண்டிருந்த போது நேற்றுக்காலை 6 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் பலசரக்குக் கடையுடன் றொட்டிக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப்பரிசில் பரீட்சையில்

# சித்தியெய்திய மாணவரை படையினர் பாராட்டுகின்றனர்

யாழ்ப்பாணம், செப். 28

இவ்வாண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் படையினர் தமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாண 512ஆவது படைப்பிரிவு நேற்றிரவு நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

மாணவர்களின் வெற்றி அவர்கள் யாழ். மண்ணுக்குப் பெற்றுத் தந்த வெற்றியாகவே நாம் கருதுகிறோம். இவ்வெற்றி யாவருக்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளது -

இவ்வெற்றி மாணவர்களைப் பகடைக் காய்களாகப் பாவித்து அவர்களின் பாடசாலைக் கல்வியைச் சீர்குலைக்க முயற்சித்தவர்களுக்குப் பெரும் தோல்வியைத் தந்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

(08 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். ஆஸ்பத்திரி வைத்தியர்களின் இன்றைய பணிப்புறக்கணிப்பு நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். போதனா வைத்தியசாலைக்கு இம்முறை குறைந்தளவு உள்ளகப் பயிற்சி வைத்தியர்கள் நியமிக்கப்பட்டதைக் கண்டித்து, அங்கு பணியாற்றும் வைத்தியர்கள் இன்று மேற்கொள்ள உத்தேசித்திருந்த அரை நாள் அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடைபெறமாட்டாது.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலில் சாதகமான முடிவு எட்டப்பட்டதால் போராட்டத்தைக் கைவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்னர்வெளியிடப்பட்டிருந்த நியமனப் பட்டியலை ரத்து செய்யவும்-

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளுக்கு முறையே 39 மற்றும் 27 உள்ளகப் பயிற்சி வைத்தியர்களை நியமிக்கவும் - அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். அமைச்சரின் உறுதிமொழி

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

நல்லூர், செட்டித் தெருவில் சகலவசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. NGO விரும்பத்தக்கது.
தொடர்பு: C/O உதயன் இல. 3012.

## தவறிவிட்டது

கந்தையா சர்வேஸ்வரி என்பவரது பெயரையும் கலைமகள் வீதி, தைபிட்டி, காங்கேசன்துறை என்னும் விலாசமுடைய தேசிய அடையாள அட்டை (647682120V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள நொக்கியா ஷோட்டலில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



Aitken Spence Overseas Travels

யாழ். நகரிலே......

## எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ்

| | | | | |
|---|---|---|---|---|
| ★ கொழும்பு | - சிங்கப்பூர் | - கொழும்பு | 27700/= | (இருவழிப் பயணச்சீட்டு) |
| ★ கொழும்பு | - சென்னை | - கொழும்பு | 13600/= | |
| ★ கொழும்பு | - டோகா | - கொழும்பு | 26000/= | |

மற்றும் சகல நாடுகளுக்குமான விமானச் சீட்டுக்கள்

**சிங்கப்பூர் சுற்றுலா**

★ 4 இரவுகள் 5 நாள்கள் தங்குமிட வசதி
★ விமான நிலையம் - தங்குமிடம் - விமான நிலையம் - போக்குவரத்து ★ காலை உணவு
★ 1/2 நாள் நகர சுற்றுலா உட்பட 44000/=

*இப்பொழுது வெஸ்ரன் யூனியன் பணப் பரிமாற்றம்*
எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ் ஊடாக
உலகின் எப்பாகத்தில் இருந்தும் அனுப்பும் பணத்தை ஒரு சில நிமிடத்தில் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-53819)

* விரைவானது * பாதுகாப்பானது
* நம்பகமானது * இலகுவானது

*பிரதம காரியாலயம்*
305, வொக்ஸ்ஷோல் வீதி, கொழும்பு 02.
T.P: 0112308308, 0777287555.
Email: outbound@aitkenspence.lk

**உடன் விரையுங்கள்**

*தொடர்புகளுக்கு:*
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3771/ 0777915824,
Email: aitkenspencejf@sltnet.lk

*உங்கள் நம்பிக்கையான பயண முகவர்*


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி தர்மபாலன் தர்மிகா**

2007ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகள் பெற்று பாடசாலையில் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் பரீட்சையில் சித்திபெறுவதற்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர், ஆசிரியை பிரியா, ஆசிரியை சிவயோகம், ஆசிரியர் வே. அன்பழகன், ஆசிரியர் பாஸ்கரன் ஆகியோரை மனதார பாராட்டுவதுடன், தர்மிகா கல்வியில் மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*மடத்தடி,*
*சாவகச்சேரி வடக்கு.*
(சி-53820)

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அக்கா நர்மதா,
அண்ணா கௌரிசங்கர் (அமெரிக்கா)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி சாரதா பரஞ்சோதி**

(சங்கீத ஆசிரியை)

**அன்னாரின் பிரிவை அறிந்து மிகுந்த மன வேதனை அடைகிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இசைக்கலைஞர்களும் இசை ஆசிரியர்களும்
தீவகம்.

(66281)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*தரம்5 (2007)புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று (மாவட்ட நிலை 169) அண்ணன் வழியில் சித்தியடைந்த யாழ்/கொக்குவில் இந்து ஆரம்ப பாட சாலை மாணவி*

**செல்வி சஞ்சிகா திருச்சபேசன்**

அவர்கள்மேலும்பல தேர்ச்சிகளைப் பெற்று சிறப்புடன் வாழவாழ்த்துவதுடன் இதற்காக ஊக்கமும் வழி காட்டல்களையும் நல்கிய அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் பெற்றோர், சகோதரன், நண்பர்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

*கனகன்புளியடி,*
*மட்டுவில்கிழக்கு, சாவகச்சேரி.*
(66256)

திரு. திருமதி வ.நாகராஜா
(தாத்தா,பாட்டி).

# சித்தன்கேணிச்சந்தி வீதியோரங்கள் துப்புரவாக்கப்படுகின்றன

சுழிபுரம், செப். 28

கடந்த செவ்வாய்க்கிழமை சித்தங்கேணியில் நடைபெற்ற கிளைமோர் சம்பவத்தை அடுத்து வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளுக்கு செல்லும் சித்தன்கேணி சந்தி ஊடான பாதையோரங்கள் துரிதகதியில் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

வீதிகளின் இரு பக்கங்களிலும் குழை செடிகள் வெட்டப்பட்டு வேலி மறைப்புக்களை அப்புறப்படுத்தும் பணிகளை குடியிருப்பாளர்களைக் கொண்டு இராணுவத்தினர் செய்வித்து வருகின்றனர்.

இரு பக்கங்களிலுள்ள புல் பூண்டுகள் செருக்கும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

கடந்த இரண்டு தினங்களாக இராணுவத்தினர் மேற்பார்வையில் துப்புரவு வேலைகள் நடைபெற்ற வண்ணமாக உள்ளன.

(அ-28)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அமரர் | திருமதி |
|---|---|
| கதிரவேலுப்பிள்ளை கந்தசாமி | கந்தசாமி இரத்திவேஸ்வரி |

*25.03.1932 - மலர்வு 03.08.1938*
*18.10.2006 - உதிர்வு - 11.03.2006*
*திதி: 28.09.2007*

எங்கள் அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

செல்லர் இல்லம்,
சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.
(66274)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி

**எமது கல்லூரியில் ஆசிரியை செல்வி சு. சுகந்தியின் அன்புத் தந்தை அமரர் சுந்தர்லிங்கம் அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு, ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**ஆசிரியர் வட்டம்,**
**யாழ். மத்திய கல்லூரி.**

(66283)

## 8ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர்**

**திருச்செல்வம் பிரான்சிஸ்**

இளவாலை யங் கென்றீசியன் விளையாட்டுக் கழக வீரர்களான ஸ்ரிபன், ரசன் ஆகியோரின் அன்புத் தந்தையான திருச்செல்வம் பிரான்சிஸ் 21.09.2007 அன்று காலமான செய்திகேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யங் கென்றிசியன் வி.க.**
**இளவாலை.**

(சி- 53818)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் - 2006

1. நுண்கலைமாணி இரண்டாம் வருடத் தேர்வு- 2002
*(கர்நாடக சங்கீதம்/ பரதநாட்டியம்)*
2. நுண்கலைமாணி மூன்றாம் வருடத் தேர்வு- 2002
*(கர்நாடக சங்கீதம்/ பரதநாட்டியம்)*
3. நுண்கலைமாணி நான்காம் வருடத் தேர்வு- 2002
*(கர்நாடக சங்கீதம்/ பரதநாட்டியம்)*

மேற்படி பரீட்சைகளை 22.10.2007 (திங்கட்கிழமை) தொடக்கம் 02.11.2007 (வெள்ளிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நுண்கலைமாணி இரண்டாம் வருடத் தேர்வு- 2002 | 22.10.2007- 26.10.2007 |
| நுண்கலைமாணி மூன்றாம் வருடத் தேர்வு- 2002 | 27.10.2007- 31.10.2007 |
| நுண்கலைமாணி நான்காம் வருடத் தேர்வு- 2002 | 01.11.2007- 02.11.2007 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 15.10.2007 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செய்முறைப் பரீட்சை (சங்கீதம்/ பரதநாட்டியம்)- 2006**

1. நுண்கலை மாணி 2ஆம்,3ஆம், 4ஆம் வருடத் தேர்வு- 2002
2. கலை முதற்தேர்வு- (2004 & 2005)
3. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - I - (2003 & 2004)
4. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - II - (2003)

மேற்படி கற்கை நெறிகளில் சங்கீதம் மற்றும் நடன அலகுகளுக்கான செய்முறைப் பரீட்சைகளை 05.11.2007 (திங்கட்கிழமை) தொடக்கம் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சைகளுக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு:* செய்முறைப் பரீட்சை முடிவடைந்ததும் பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.** 24.09.2007 (சி.53817)


**Spoken English** Spoken English CDகள் Learning English CD கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

**சமையல் ஆள் தேவை**

கொசி உணவகத்திற்கு சமையல் ஆள்தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். 30.09.2007 அன்று ஞாயிறு 10 மணிக்கு நேரில்வரவும்.
**15, மணியம் கட்டடம்,**
**சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி.**

**கடையுடன் வீடு வாடகைக்கு**

ICRC க்கு அண்மித்த சந்தியில் இரு கடையுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு.
தொ.பே. 021 4590731 / 077-6141176
(3 மணிக்குப் பின்)


## மரண அறிவித்தல்

### சீனியர் கணேசராசா

(ரவி- தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கங்களின் இணையம்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பூநாறி மரத்தடியை வதிவிடமாக கொண்ட சீனியர் கணேசராசா நேற்று (27.09.2007) அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**தனியார் பஸ் உரிமையாளர் சங்களின் இணையம்**
**தலைவரும், உறுப்பினர்களும் பணியாளர்களும்.**

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (66292)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் குமரகுரு

(தவில் வித்துவான் - கலாபூசணம், லயஞான கலாநிதி)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, 241-3/1 W.A. சில்வா மாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குமரகுரு 26.09.2007 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - வடிவாம்பாள் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற சிவனேஸ்வரியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.09.2007) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*92, பூதவராயர் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*
*0112580910.*
(66282)

தகவல்:
**N. இராசேந்திரம்**
**(சகோதரர் - தவில்).**

### துரைரத்தினம் ஸ்ரீகனகசபேசன்

(ஆசிரியர், யா/ ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி - புத்தூர்)

வளலாயைப் பிறப்பிடமாகவும், பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் ஸ்ரீ கனகசபேசன் நேற்று (27.09.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பத்தமேனி, அச்சுவேலி.*
(66251)

தகவல்:
**து. சந்திரகுமார் (சகோதரர் ).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தத் திருவிழா புதனன்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். 1) கடலில் தீர்த்தம் எடுப்பதற்குத் தயாராகின்றார் ஆஞ்சநேயர் 2) பாமா, ருக்மணி சகிதம் தீர்த்தம் ஆடுவதற்காக வல்லிபுர ஆழ்வார் பந்தலில் அமர்ந்து காட்சி தருகிறார். 3) கடல் தீர்த்தத்தால் சக்கர ஆழ்வார் நீராட்டப்படுகிறார். 4) தீர்த்த உற்சவத்தில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான பக்தர் வெள்ளத்தில் ஒரு துளி. (படங்கள் சுந்தா)

# அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி கிடைக்கும்

யாழ்ப்பாண, செப்.28

குடாநாட்டில் அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்களில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவுடன் பலாலியில் நடத்திய சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் வயல் நிலங்களும் உள்ளன. இதனால் விவசாயிகள் தமது காணிகளில் விதைப்பை மேற்கொள்ள முடியாது பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். அத்துடன் குடாநாட்டில் அரிசிக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது எனச் சுட்டிக் காட்டினர்.

பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள வயல் நிலங்களில் காலபோக நெல்விதைப்பை மேற்கொள்ளஅனுமதிப்பதன் மூலம் குடாநாட்டின் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் எனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படும் எனவும் எடுத்துரைத்தனர்.

இதையடுத்து படைகளின் தளபதி பாதுகாப்பு வலயத்திலுள்ள வயல் நிலங்களில் நெல் விதைப்பதை மேற்கொள்ள அனுமதிப்பதென உறுதியளித்தார். (202)

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு புதிய மாவட்ட வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம்,செப்.28

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையின் புதிய மாவட்ட மருத்துவ அதிகாரியாக மருத்துவர் க.தயாளன் பொறுப்பெற்றுள்ளார்

மாவட்ட மருத்துவ அதிகாரியாக கடமையாற்றிய பற்சிகிச்சை நிபுணர் ச.பாலகுமார் கொழும்பு மருத்துவமனையொன்றுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதையடுத்து புதிய மாவட்ட மருத்துவ அதிகாரியாக க.தயாளன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே சாவகச்சேரி மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (203 -207)

## செயலக சிற்றுண்டிச்சாலை தின்பண்டங்கள் பலவும் நிறை குறைந்தவையாம்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.செயலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையில் விற்கப்படும் சிற்றுண்டிகள் மிகச் சிறிய அளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு விற்கப்படும் இடியப்பம், வடை மற்றும் வாய்ப்பன் உட்பட பல சிற்றுண்டிகள் அளவில் சிறியனவையாகவும் நிறை குறைவாகவுமே விற்கப்படுவதாக கூறுகின்றனர்.

இதேவேளை, சிற்றுண்டிச்சாலையை நடத்துபவர்களுக்கு செயலக நலன்புரிச் சங்கத்தினால் நியாய விலையில் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றபோதும் தொடர்ந்தும் நிறைகுறைந்த தின்பண்டங்களையே விற்று வருகின்றனர் என்று குறை கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக செயலக நலன்புரிச் சங்கத்திற்கு முறைப்பாடு செய்யப் பட்ட போதும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (203)

# வலிகாமத்தில் படிவம் வழங்காதோருக்கு ஞாயிறன்று வீடுவீடாக வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாண, செப். 28

வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்காக படிவங்கள் நாளை மறுதினம் ஞயிற்றுக்கிழமை வீடு வீடாகச் சென்று விநியோகம் செய்யப்படவுள்ளன.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் இத்தகவலை தெரிவித்துள்ளது

அடையாள அட்டைக்கான விண்ணப்ப படிவங்கள் அந்தந்த கிராமசேவையாளர் ஊடாக வீடுகளுக்கு வந்து வழங்கப்படுகின்றது. எனினும் வலிகாமத்தில் இதுவரை விண்ணப்பம் வழங்கப்படாதோருக்கு அவற்றை வழங்குவதற்காக நாளை மறுதினம் ஞயிற்றுக்கிழமை கிராம அலுவலருடன் இராணுவ அங்கத்தவர்கள் வருவர். விண்ணப்பங்களை இதுவரை பெறாதவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

அத்துடன் பூர்த்தி செய்த விண்ணப்ப படிவங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்காக அடுத்த மாதம் 5ஆம் திகதி எமது அங்கத்தவர்கள் வருவர்.

இந்த நடைமுறை 10 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தேவையற்றது.

படிவங்களுடன் வழங்கப்படும் புகைப் படங்கள் வர்ணப் புகைப்படங்களாக இருக்கவேண்டும். பின்னணி வர்ணம் கவனிக்கப்படமாட்டாது.

அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் முகமாக குடும்ப புகைப்படங்களை தாமதித்து வழங்கலாம் என்று படைத்தரப்பின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. (1)

## நவராத்திரியை ஒட்டி பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.28

நவராத்திரி தினத்தை முன்னிட்டு இணுவில் கந்தசாமி கோயில் இளந்தொண்டர் சபை நடத்தும் பேச்சுப்போட்டி எதிர் வரும் 13ஆம் திகதி காலை 9 மணிக்கு சபையின் சைவப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர் வரும் 10ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் செயலாளர், இளந்தொண்டர் சபை, இணுவில் கந்தசாமி கோயில் என்னும் முகவரியில் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-288)

## யுனிசெவ் நிறுவனம் இரண்டாம் கட்டமாக மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்குகிறது

யாழ்ப்பாணம், செப். 28

யுனிசெவ் நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கு இரண்டாம் கட்டமாக கற்றல் உபகரணப் பொதிகளை வழங்கிவருகின்றது.

இதன் அடிப்படையில் வலிகாமம் வலய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் வழங்கப்படும் என்று கூறப்பட்டது.

தென்மராட்சி வலய மாணவர்களுக்கு எதிர்வரும் இரண்டாம் திகதியும் யாழ். வலய மாணவர்களுக்கு மூன்றாம், நான்காம் திகதிகளும் வடமராட்சி வலய மாணவர்களுக்கு எதிர்வரும் 5ஆம் திகதியும் தீவக வலய மாணவர்களுக்கு 10ஆம் திகதியும் கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாக கூறப்பட்டது.

யுனிசெவ் நிறுவனத்தால் முதற்கட்டமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட போது அவற்றைப் பெறாத பாடசாலை மாணவர்களுக்கே இரண்டாம் கட்டத்தின் போது வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு மாணவருக்கும் இது இலவசமாகவே வழங்கப்பட்டுவருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-203)

## ஆலய புனரமைப்புக்கு நிதி வழங்கல் இன்று

நல்லூர்,செப்.28

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலயங்கள் புனரமைப்புக்கென நிதி வழங்கப்படவுள்ளது.

சுமார் 20 ஆலயங்களுக்கான காசோலைகள் நாவலர் மணி மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதால் நிதி உதவி கோரி விண்ணப்பித்தவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து தமக்குரிய காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (1-111)

## செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2008ஆம் ஆண்டு தரம் 7 வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டலுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரச்சினைகள், இனங்காணப்பட்ட மாணவர்களின் விவரங்களைச் செயலமர்வில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

வடமாகாண வலயக் கல்வி அலுவலககங்களில் சைவ சமய பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான தரம் 7, 11 வகுப்புகளுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான மூன்று நாள் செலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 5,6,7 ஆகிய திகதிகளில் தேசிய கல்வி நிறுவனத்தில் செயமர்வுகள் மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப் படவுள்ளன.

வலயங்களில் சைவ சமய பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை கலந்து கொள்ளச் செய்யுமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் மாகாண கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (203-207)

# அரச பொது முகாமைத்துவ உதவியாளர் ஆள்சேர்ப்பு; நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.28

அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 63 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு -

எம்.தயாபரன் - அளவெட்டி கிழக்கு, கே.லம்போதரன் - அளவெட்டி தெற்கு, கே.மகிழினி - இமையாணன் வடக்கு, ரி.பிரபாகரன் - மீசாலை வடக்கு, கே.சஞ்சீவா - கரவெட்டி, எல்.ஜெசிகரன் - நீர்வேலி தெற்கு, ரி.நற்பவன் நீர்வேலி வடக்கு கே.பாலசண்முகன் - கொக்குவில், என்.சிவநயனி - ஆனைக்கோட்டை, பி.சுதாஜினி - வல்வெட்டித்துறை,

வி.விஜயலதா - புங்குடுதீவு, ரி.வினுஜா - அச்சுவேலி, ரி.தர்சிகா - கோண்டாவில் மேற்கு, எஸ்.ஜெனோதினி - திருநெல்வேலி தெற்கு, வி.வினோகரன் - புலோலி, எஸ்.தர்சினி - அளவெட்டி மத்தி, ரி. கிருஷ்ணசாந்தி - புலோலி தெற்கு, ரி.கீர்த்தனா - சாவகச்சேரி வடக்கு டபிள்யூ. கிருஷ்யா - அரியாலை, கே.மனோரஞ்சிதம் - காரைநகர்.

எஸ்.ஜே.நிரோஜன் - வட்டுக்கோட்டை, கே.சுகிதா - நல்லூர், என்.பிரணவசொரூபி - ஏழாலை மேற்கு, எம்.ஜனிதா - மூளாய் மேற்கு, ஜி.சிவரஞ்சினி - புலோலி தெற்கு, எஸ்.நளினி - சுதுமலை தெற்கு, என். மனோரஞ்சன் - திருநெல்வேலி மேற்கு, பி.துஷ்யந்தினி - பருத்தித்துறை, பி.செல்வகுமார் - நல்லூர், வி.சுவேதா - இளவாலை.

ஐ.சர்மிளா - மல்லாகம், எஸ்.குகசீலன் - கரவெட்டி மத்தி, எஸ்.சிவதீபா - விடத்தற்பளை, எஸ்.தீபா - வடலியடைப்பு, பி. தவலிங்கம், உடுவில் மேற்கு, என்.ராஜலக்ஷமன் - அரியாலை, [illegible] - கரணவாய் தெற்கு, ஆர். [illegible] - புலோலி தெற்கு, ஆர்.சுரேன் - கந்தர்மடம்.

வை.துஷ்யந்தன் - கொக்குவில், ஈ. அலக்சியா - அச்சுவேலி, வி.யே.டொறினா - இளவாலை, பி.ரமேஸ் - புலோலி தெற்கு. வி.சுபாஜினி - பருத்தித்துறை. ரி.கோகிலவதனா - கப்பூது, கே.துவரகா - கரவெட்டி மத்தி, வி.சுகந்தி - திருநெல்வேலி, ஜி.பிரமிலா - அச்சுவேலி, ரி.ஜனந்தன் - புத்தூர் கிழக்கு.

கே.கிரிகரன் - 4ஆம் குறுக்குத்தெரு - யாழ்ப்பாணம், ஆர்.ராதா - மாலிசந்தி, அளவை கிழக்கு, என்.சுபோஜனா - சாவகச்சேரி, என்.லதா - காரைநகர், பி.தேனுஜா - கொக்குவில் மேற்கு, கே.தாட்சாயணி - உரும்பிராய், பி.நிவேதிகா - 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், கே.வாமினி - கோப்பாய் மத்தி, கே.ஹம்சா - நீராவியடி, யாழ்ப்பாணம், எஸ்.ஹம்சிகா - கோண்டாவில் மேற்கு.

எஸ்.சிவப்பிரியா - கரவெட்டி மத்தி, பி. விஜிதா - புலோலி தெற்கு, எஸ்.கஸ்தூரி - நெல்லியடி, எஸ்.சிரோமி - நெல்லியடி. (ப-203)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## SATHYA SAI SCHOOL- MANIPAY

ADMISSION FOR GRADE- 6 2008
ENGLISH MEDIUM

APPLICATIONS ARE INVITED FOR GRADE-6 ENGLISH MEDIUM- STUDENTS FOR THE YEAR 2008

APPLICATIONS SHOULD BE SUBMITTED ON OR BEFORE 15th OCTOBER 2007 TO REACH THE CHAIRMAN

Chairman,
School Management Committee
SATHYA SAI SCHOOL
Manipay, Srilanka.

(66130)



WESTERN UNION ® வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் பணப் பரிமாற்றம் ®

WESTERN UNION மூலம் பணம் அனுப்பி
பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN IO இலக்கங்கள்)
கிடைத்து விட்டதா? ஒரு சில நிமிடங்களில்
உங்கள் கைகளில் பணத்துடன்
பரிசில்களையும் பெற்றுக் கொள்ள

**SRI MURUGAN**

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303, K.K.S.ROAD,
JAFFNA.

T.P.: 021- 222 2670, 5392
Fax: 021- 2223214
e.Mail: srimurugan @ eureka.lk

(C/53261)



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
* றாஜீஸ் -நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி
* மதுரா-ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 222 3529, 222 2867

(66161)


## கூட்டுப்பசளை தயாரிக்கும் தொட்டி சகாயபுரத்தில் அமைக்கப்படுகிறது

வலி.தென்மேற்கு, செப்.28

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம் சகாயபுரத்தில் கூட்டுப் பசளை தயாரிக்கும் தொட்டி ஒன்றை அமைத்து வருகின்றது.

சகாயமாதா விவசாயச் சங்கம் இதன் கட்டட வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

இக் கூட்டுப்பசளை தயாரிப்பின் மூலம் 26 பயனாளிகள் பயனடைவர் என்றும்- வீட்டுத் தோட்ட செய்கை மற்றும் பயிர்ச்செய்கைக்கு இந்த கூட்டுப்பசளை பயன்படுத்தப்படுமெனவும் சகாயமாதா விவசாய சங்கத் தலைவர் அ.யேசுராசா தெரிவித்தார்.

(202-135)

## வைத்தியசாலை இடமாற்றம்

பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் பண்டத்தரிப்பு ஆயுள்வேத கிராமிய வைத்தியசாலை கடந்த 24 ஆம் திகதி முதல் பண்டத்தரிப்பு கீரிமலை வீதியில் தபால் அலுவலகத்திற்கு பக்கத்திலுள்ள கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ் வைத்திய சாலை தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து ஆளணிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும்- தளபாடங்களும் கிடைக்கவுள்ளதாகவும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(202-135)


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 09 . 1938



உதிர்வு 08 . 10 . 2006

திருமதி **தவமணி வன்னியசிங்கம்**

யாரொடு நோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்?
விதியிது என்று எப்படி மறப்போம்?
எங்கள் வீட்டு ஒளிவிளக்கு அணைந்து ஓராண்டு
ஆனாலும் ஆறவில்லை நம் பாச உள்ளங்களில் துயரம்!
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

555,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(66197)

மகள்,
சகோதர சகோதரிகள்.



## சேவை நலன் பாராட்டு



### ஐ.மனோகரன்

(உப அதிபர், யா/தாவடி இ.த.க.பாடசாலை)

30வருடகால ஆசிரிய சேவையில் இருந்து இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் உபஅதிபர் ஐ.மனோகரன் அவர்களை நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**சேவை விவரம்:**

இ/ஹெட்டஹெத்த த.வி.
*23.06.1977- 31.12.1977*
யா/ கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை
*01.01.1978- 31.12.1979*
இ/வெல்லோபிற்றிய த.வி.
*01.01.1980- 01.10.1984*
யா/தாவடி இ.த.க.பாடசாலை
*01.10.1984- 30.09.2007*

(64134)

யா/தாவடி இ.த.க.பாடசாலை,
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 26 . 08 . 1958



உதிர்வு 29 . 08 . 2007

**அமரர் பரமலிங்கம் ஸ்ரீதரன்**

(உரிமையாளர், லிட்டில் இந்தியன் எம்போறியம் - பாரிஸ்- பிரான்ஸ்)

நிலையில்லா வாழ்வு தன்னில்
நீங்காத நினைவுகளைத் தந்துவிட்டு
நிலையான வாழ்வு தேடிச் சென்றீரோ!

*29.08.2007 அன்று பிரான்ஸில் காலமான செய்தி கேட்டு உடன் எமது இல்லம் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவகையில் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (28.09.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(66199)

வ.பரமலிங்கம் (நயினாதீவு),
(முன்னாள் கொக்குவில் கிராமசபை உபதலைவர்)
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவலைகள்!



மகிழ வைக்க வந்தது
12.02.1996

நெகிழ வைத்துச் சென்றது
29.08.2007

### செல்வன் வாசன் தீபராஜ்

மருதடி, புத்தூர் வடக்கு, புத்தூர்



அகங்களில் அன்புருவாய் அமர்ந்திருந்த தீபனே- நம்
முகங்களில் இருளை வைத்து முகம் மறந்து ஓடினையோ!
அகவையில் பதினொன்றை அண்டிவந்த தீபனே- நம்
சுகத்தினில் தீயை மூட்டி காலன் உன்னை இழுத்தானோ!

சுற்றி வந்த சொந்தங்கள் சூழ்ந்திருக்கும் சபைதனில்
சற்று நீ வித்தியாசம் சால நன்கு காட்டி வந்தாய்
கற்ற வித்தை களநிலையில் உற்றார் பெற்றார் மனம் மகிழ்ந்து
முற்று முழுதாய்க் காணமுன்னே ஊழிக்காலன் பறித்தானே!

வெந்த துயர் வடிவில் உந்தன் தாயார் உன்னைத் தேடுகின்றாள்
தந்தை யுனைக் காண்பதற்காய் லண்டன் நாட்டில் தவிக்கின்றான்
சொந்தங்கள் கூடியிங்கு சோக நிலையாகி நின்றோம்- என்றும்
சிந்தும் கண்ணீர் உறவுகளின் சிந்தையில் தீபா நீயேதானடா

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

*இன்று (28.09.2007) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.*

மருதடி,
புத்தூர் வடக்கு,
புத்தூர்.

திருமதி வாசன் ரஞ்சிததேவி (ரஞ்சனா)
(அப்பா, அம்மா)

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.



## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில 19 . 11 . 1962



ஆண்டவன் அடியில் 01 . 07 . 2007

(66198)

**அமரர் சின்னையா ரவிவேந்தன்**

*01.07.2007* அன்று ஜேர்மனியில் அகாலமரணமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு இன்று *(28.09.2007)* வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சின்னையா ஈஸ்வரி (தாய், தந்தை),
விமலேஸ்வரி (குஞ்சு- மனைவி, ஜேர்மனி),
செந்தூரன், (மகன்- ஜேர்மனி).

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற மீள்குடியமர்வை அரசு உடனே நிறுத்த வேண்டும்

## சர்வதேச கண்காணிப்பு அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, செப். 28

'இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் பாதுகாப்பற்ற நிலையில் குடியமர்த்தப்படுவதை நிறுத்தவேண்டும்'' - என்று சர்வதேச இடம்பெயர்ந்தோர் தொடர்பான கண்காணிப்பு அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வேண்டுகோளில் மேலும் வலியுறுத்தப்பட்டிருப்பவை வருமாறு:-

இடம்பெயர்ந்தோரின் விருப்பம் இன்றி அவர்களை பலவந்தமாக அவர்களின் இடங்களுக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கை அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - இடம்பெயர்ந்தோர் தாமாகவே பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்பது அரசின் கடமையாகும்.

மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளோர் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றனர். அவர்கள் உரிய தொழில்கள் இன்றி அவதிப்படுகின்றனர்.

இந்த நிலையில் மீளக்குடியமர்ந்தோரை மீளக்குடியமர்த்தும்போது சர்வதேச நியமனங்களுக்கு ஏற்பசெயலாற்ற வேண்டும் என்பது அவசியம் என்று சர்வதேச இடம் பெயர்ந்தோர் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. (சி)

# காயத்திரி சுவாமிகளின் சமாதி அடக்கம்

கொழும்பு,செப். 28

மகா சமாதி அடைந்த காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளின் பூதவுடல் நேற்று முன்தினம் நுவரெலியா காயத்திரி ஜாகசாலையில் சமாதிநிலையில் வைக்கப்பட்டது.

காயத்திரிபீட சித்தர் கடந்த திங்கட்கிழமை சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் மகாசமாதி அடைந்தார். அவரது உடல் சென்னையில் இருந்து இலங்கைக்கு விமானம் மூலம் எடுத்துவரப் பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் சமயத் தலை வர்கள், பிரமுகர்கள் மற்றும் மக்கள் எனப் பலர் கலந்துகொண்டு சித்தருக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். (சி)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஒத்திவைக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு,செப்.28

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிகவும் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளன என மனித உரிமை அமைப்புகள் தெரிவித்து வருகின்றபோதும், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஒத்திவைக்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார் என்று இணையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத அந்த இராஜதந்திரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா.வின் மனித உரிமை சபையிலும், பிரசெல்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்திலும் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் எதிர்வரும் மாதம் இலங்கை செல்லவுள்ள ஐ.நா.வின் மனித உரிமை அமைப்பின் ஆணையாளர் லூய்ஸ் ஆர்பரின் பயணத்தின் பின்னர் அதனை நடைமுறைப்படுத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை நாடான போத்துக்கல் தீர்மானித்துள்ளது - எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த இருவருடங்களில் இலங்கை அரசின் அழுத்தங்கள் காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தை மூன்று தடவைகள் ஒத்திவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

# 'சிறகுவிரித்த புலிகள்' இறுவட்டை தளபதி சூசை வெளியிட்டு வைத்தார்



கிளிநொச்சி, செப். 28

வான் புலிகளின் 'சிறகு விரித்த புலிகள் ' பாடல் இறுவட்டை தமிழீழ கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைத்தார்.

புதுக்குடியிருப்பிலுள்ள மாவீரர் மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை இந்த நிகழ்வு நடை பெற்றது. புதுக்குடியிருப்பு கோட்ட அரசியல் பொறுப்பாளர் இளம் பருதி தலைமை வகித்தார்.

பொதுச்சுடரை லெப்டினன்ட் கேணல் கிட்டாவின் துணைவியார் ஏற்றி வைத்தார். திலீபனின் திருவுருவப்படத்துக்கு லெப்.கேணல் குஞ்சனின் துணைவி ஈகச்சுடரேற்றி மாலை சூட்டினார்.

கேணல் சங்கரின் திருவுருவப்படத்துக்கு அவரின் துணைவியார் குகா ஈகச்சுடரேற்றி மாலை சூடினார். விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பிர் க.வே. பாலகுமாரன் வணக்க உரை நிகழ்த்தினார்.

'சிறகு விரித்த புலிகள்' பாடல் இறுவட்டை கடற்புலிகளின் சிறப்புத தளபதி கேணல் சூசை வெளியிட கேணல் சங்க ரின் துணைவியார் குகா பெற்றுக்கொண் டார். (சி)

# ஊடகங்களுக்கு எதிராக ஓகஸ்ட்டில் 9 முறைப்பாடுகள்

கொழும்பு,செப்.28

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு, தினசரி மற்றும் வாராந்தம் வெளிவருகின்ற பத்திரிகைகளுக்கும் ஒரு தொலைக்காட்சி சேவைக்கும் எதிராக ஓகஸ்ட் மாதத்தில் 09 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன - என்று கூறப்படுகிறது.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் பத்திரிகைகளுக்கும் எதிராக 08 முறைப்பாடுகளும் தனியார் தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பட்ட நிகழ்ச்சியொன்றுக்கு எதிராக ஒரு முறைப்பாடும் பொதுமக்களால் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுள் 5 முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைவாக இருக்காததால் செல்லுபடியற்றவை என நிராகரிக்கப்பட்டன. மூன்று முறைப்பாடுகள் முறைப்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருத்தங்களை பிரசுரிப்பதற்காக பத்திரிகைகளின் ஆசிரியர்களின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதேநேரம் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இலத்திரனியல் ஊடகங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை ஏற்பதில்லை. அச்சு ஊடகங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை மட்டுமே ஏற்று அவற்றில் முறைப்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றபடி அவர்களுக்கு அநீதிகள் ஏற்பட்டிருப்பின் அவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது

யாழ்ப்பாணம்,செப்.28

கடந்த ஒரு வருட காலமாக விற்பனை இன்றி வீழ்ச்சியடைந்து காணப்பட்ட வெங்காயத்தின் விலை தற்போது மெது மெதுவாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

ஏ-9 வீதி மூடப்பட்டதால் ஏற்றுமதி இன்றி வீழ்ச்சியுற்று காணப்பட்ட வெங்காயத்தின் விலை கடந்த ஒரு வார காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிலோ 10 ரூபாவாக விற்கப்பட்ட இந்த வெங்காயம் தற்போது 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற்கப்படுகின்றது.

(203-224)

# இரவில் வெளிச்சம்

*ஓர் ஊரில் ஒருவர் இருந்தார். ரொம்ப நல்லவர். யாருக்காவது ஏதாவது கொடுத்துக் கொண்டே இருப்பார். கொடையாளி.*

*தினமும் யாராவது ஒருவருக்கு ஏதாவது கொடுக்கவில்லை என்றால் அவருக்குத் தூக்கம் வராது. அப்படி ஒரு பழக்கம். அது மட்டுமல்ல. அவர் கொடுப்பது அடுத்தவர்களுக்குத் தெரியாது. ரகசியமாகக் கொடுப்பார். வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது என்று எண்ணுபவர். ஒரு நாள் இரவு அவர் ஏற்கனவே தயாராகக் கட்டி வைத்திருந்த பணமுடிச்சைக் கையில் எடுத்துக் கொண்டார். வீட்டைவிட்டு வெளியில் வந்து தெருவில் நடந்தார்.*

*இன்றைக்கு யாருக்குத் தருமம் செய்வது என்று யோசித்துக் கொண்டே இருட்டில் நடந்து கொண்டிருந்தார். எதிரில் ஒருவர் வருவது தெரிந்தது. உடனே அவரிடம் போனார். தன்னிடமிருந்த பண முடிச்சை அவசர அவசரமாக அவர் கையில் திணித்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டார்.*

*''அப்பாடா... ஒரு வழியாக யாருக்கும் தெரியாமல் இன்றைக்குத் தருமம் செய்தாகிவிட்டது!'' என்ற மகிழ்ச்சி, மனநிறைவு அவர் முகத்தில்! நிம்மதியாகத் தூங்கி எழுந்தார். மறுநாள் காலையில் ஊர் முழுவதும் ஒரே பேச்சு!*

*''நேற்று ராத்திரி ஒரு திருடன் கையிலே யாரோ பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனாராம்!'' என்று எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். இதைக் கேள்விப்பட்டதும் அந்தப் பெரியவருக்கு மிகவும் வருத்தமாகப் போய்விட்டது.*

*''அடடா! போயும் போயும் ஒரு திருடனுக்கா உதவி செய்திருக்கிறோம். பிரயோஜனமில்லாமல் போய் விட்டதே!'' என்று நினைத்தார்.*

*சரி, இன்றைக்கும் யாருக்காவது உதவி செய்வோம் என்று முடிவு செய்தார்.*

*இரவு வந்தது. இவர் வழக்கம் போல் கையில் பணமுடிச்சுடன் தெருவில் இறங்கி நடந்தார். எதிரில் ஒரு பெண் உருவம். மங்கலாத் தெரிந்தது. இவர் உடனே அந்தப் பெண்ணிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு திருப்தியாக திரும்பிவந்துவிட்டார். மறுநாள் காலையில் ''நேற்றிரவு நெறி தவறி நடக்கும் ஒரு பெண்ணின் கையில் யாரோ பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்!'' என்று ஊர் முழுவதும் பேசிக் கொண்டார்கள்.*

*''அடடா! இன்றைக்கு தவறுதலாக நடந்து விட்டதே!'' என்று வருத்தப்பட்டார்.*

*''இருக்கட்டும்.. இன்றைக்கும் ஏதாவது தருமம் செய்வோம்'' என்று நினைத்துக் கொண்டார். மூன்றாம் நாள் இரவில் புறப்பட்டார். இப்போதும் எதிரில் ஒருவர் வந்தார். இவர் பணத்தைக் கொடுத்து விட்டு வந்தார். மறுநாள் மக்கள் பேசிக் கொண்டார்கள்:*

*''நேற்று இரவு ஒரு செல்வந்தர் கையில் யாரோ பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருக்காங்க!''. அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. என்ன இது.. தினம் இப்படி ஆகிறதே என்று நினைத் துக்கொண்டே படுத்துத் தூங்கினார். அன்றைக்கு ராத்திரி ஒரு கனவு. அந்தக் கனவில் இறைவன் வந்து சொன்னாராம்.*

*''இதோ பாரப்பா, நீ கொடுத்த தர்மம் வீணாகவில்லை! உன்னிடம் பணம் வாங்கிய அந்தத் திருடன் திருந்திவிட்டான்! அந்தப் பெண்ணும் திருந்திவிட்டாள்! அந்த செல்வந்தனும் கொடையாளி ஆகிட்டான்!'' என்று சொன்னாராம்.*

*நல்ல மனதுடன் தர்மம் செய்தால் அது வீணாவதில்லை!*

*இன்னொரு கருத்து. தர்மம் தன்னை மட்டுமல்ல. அடுத்தவர்களையும் [illegible] பாற்றும்! இது தான் நாம் புரிந்துகொள்ள வேண்டியது!*

# தலைசிறந்த பல்தேசிய நிறுவனங்களுடன் முன்னேற்றப் பங்காளியாகிறது CIMA ஸ்ரீலங்கா

தொழில் நிறுவனங்களுக்கு நன்மை அளிப்பதை நோக்கமாகக் கொண்ட புதிய பங்காளித்துத் திட்டம் ஒன்றை CIMA ஸ்ரீ லங்கா ஆரம்பித்துள்ளது. ''CIMA கோப்பரேட் பாட்னர் புரோகிராம்'' எனப்படும் இத்திட்டத்தின் ஆரம்ப வைபவம் கொழும்பிலுள்ள ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் இடம்பெற்றது. CIMA வழங்கும் கல்வித் தராதரம் ஓர் கூட்டிணைந்த தொழிற் தகைமை அளவுகோலாக ஏற்றுக்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதும் பிரபல தொழில் நிறுவனங்களுடன் உறவுகளை வலுப்படுத்திக்கொள்வதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

CIMA என்பது கைத்தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களிலும் இலாப நோக்கமற்ற சேவை அமைப்புகளிலும் பணியாற்றும் முகாமைக் கணக்காளர்களின் கல்விக்கும் பயிற் சிக்கும் பொறுப்பான அமைப்பாகும். பிரிட்டனில் தலைமையகத்தைக் கொண்ட மற்றெந்த அமைப்பையும்விட இதுவே பொதுச் சேவைகள் துறையில் கூடுதலான அங்கத்தவர் களைக் கொண்டுள்ளது. இலங்கையில் மாத்திரம் 1,800 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர் கள் பல்வேறு தனியார் மற்றும் அரசங்க நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். இலங்கையில் 11,000 இற்கு மேற்பட்ட CIMA மாணவர்கள் உள்ளனர்.




CIMA ஸ்ரீ லங்கா 2007/2008ஆம் ஆண்டு காலப் பகுதிக்கென பிரபல உள்நாட்டு மற்றும் பல்தேசிய நிறுவனங்கள் சிலவற்றைத் தனது கூட்டிணைந்த பங்காளிகளாகச் சேர்த்துக்கொண்டுள்ளது. இது ஒரு வருடாந்தத் திட்டமாகும். ஒவ்வொரு வருடமும் CIMA ஸ்ரீலங்கா தனது பங்காளித் தொழில் நிறுவனங்களைப் பொதுவான விழுமியங்கள் மற்றும் சிறந்த நிர்வாகத்திலும் ஒழுக்கநெறி நடைமுறைகளிலும் கொண்டுள்ள பொதுவான அக்கறை என்பவற்றின் அடிப்படையில் மிகவும் அவதானமாகத் தெரிவுசெய்கிறது.

ஸ்ரீலங்காவின் தலைவர் அருண பெர்னாண்டோ, பங்காளித்துவத் திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் பேசியபோது CIMA அமைப்பைப் பொறுத்தவரையில் இத்திட்டம் முதன் முறையானது என்றும் இதனை ஆரம்பித்தமை குறித்து CIMA ஸ்ரீ லங்கா பெருமையடைகிறது என்றும் கூறினார். ''முழுக்க முழுக்க ஸ்ரீலங்காப் பிரிவு அலுவலர்களின் முயற்சியினாலேயே இந்தக் கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

CIMA அமைப்பின் தொழில்தருநர் மற்றும் உபாய அபிவிருத்திப் பணிப்பாளருமான ரிக் ஸ்டோர்ஜ், CIMA ஸ்ரீலங்கா பிரிவின் நிறுவனப் பங்காளித்துவத் திட்ட ஆரம்ப வைபவத்திற்கு அழைக்கப்பட்டமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்துப் பேசினார். முன்னணி பல்தேசிய நிறுவனங்களுடன் நெருங்கிச் செயற்படுவது உலகளாவிய CIMA அமைப்புக்கு ஒரு முக்கிய உந்துசக்தியாகும் என்றும் தொழில்தருநரின் முதல் தெரிவாக CIMA விளங்குவதை இது உறுதிப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

CIMA ஸ்ரீலங்கா பிரிவின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரட்லி எமர்ஸன் கருத்து வெளியிடுகையில், இலங்கை இதுவரை காலமும் CIMA அமைப்பிற்கான ஒரு விநியோகச் சந்தையாகவே இருந்து வந்தது என்று கூறினார்.

''நாம் நேரடியாக மாணவர்களுடனும் அங்கத்தவர்களுடனுமே செயற்பட்டு வந்தோம். தொழில்தருநர்களுடன் எமக்கு நெருங்கிய உறவுகள் இருக்கவில்லை. ஆனால், இப்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள பங்காளித்துவ ஒப்பந்தம் இந்த நிலையை மாற்றி, நாம் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்தும். நாம் தெரிவுசெய்துள்ள கம்பனிகள் அனைத்துமே முன்னணி நிறுவனங்களாகும். இதனையிட்டு நாம் பெருமை யடைகிறோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

CIMA பங்காளி நிறுவனங்களின் பட்டியலையும் இத்திட்டம் பற்றிய மேலதிக விவரங்களையும் பெறுவதற்கு www.cimalobal.com/srilanka/corporatepartners என்ற எமது பிரத்தியேக இணையத்தளத்தைப் பார்வையிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்தும்
## 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



2007ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில்
151 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த
கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி மாணவன்

**செல்வன் பிரபாகரன் மிதுர்சன்**

மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (66272) **கணேசமூர்த்தி** *(அம்மப்பா).*

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2008

*2007ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எமது கல்லூரியில் படிவங்களைப் பெற்று அனுமதிக்காக 15.10.2007இற்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.*

(சி-53816) **வி.கணேசராசா** (அதிபர்).

## JAFFNA HINDU COLLEGE
## ENGLISH DAY - 2007

**Date: 28th September 2007**
**Time: 10.00 a.m.**
**Venue: Cumaraswamy Hall**
**Chief Guest:**
**Mr. T.Arunagirinathan**
*Lecturer, ELTC, University of Jaffna*

Old Boys, Parents and Well Wishers are cordially invited.

(66267) **Principal, Staff & Students.**

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சிறிகாந்தன் நிஷாந்தன்**



*எங்கள் கல்லூரி அதிபர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்களின் மூத்த சகோதரனின் ஏகபுத்திரன் அமரர் ஸ்ரீகாந்தன் நிஷாந்தன் 25.09.2007 அன்று அகால மரணமடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.* (66259)

**கல்லூரிச் சமூகம், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.**

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
★
05
★
1957



மறைவு
08
★
10
★
2006

பளை, தர்மக்கேணியைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை தற்காலிக வதிவிடமாகக் கொண்டிருந்தவருமான


**அமரர் கந்தையா கனகசிங்கம்** *(பளை மாமா)*

திதி: துதியை

ஆண்டொன்று அவசரமாய் மறைந்தாலும்
மாண்டுவிட்டீர் என்று சொல்ல - மனது
மறுக்குதைய்யா யோசிக்க யோசிக்க
நிமிடம் கடந்தாலும் உன் சிரித்த தோற்றம்
இதயக் கல்லறையில் என்றுமே அழியாது.

*ஏழாலை கிழக்கு,*
*களவாவோடை.* **மனைவி, க.பரமேஸ்வரி** *(பிள்ளை),*
**க.யதுர்சன்** *(பேரப்பிள்ளை).* (64979)

## துயர் பகிர்கின்றோம்



**அருட்பணி நீக்கிலாஸ்பிள்ளை பாக்கியரஞ்சித்**
(JRS மன்னார் மாவட்ட இணைப்பாளர்)

JRS மன்னார் மாவட்ட இணைப்பாளர் அருட்பணி நீக்கிலாஸ்பிள்ளை பாக்கிய ரஞ்சித் அடிகளார் (26.09.2007) புதன் கிழமை அகாலமரணம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். இவரது பிரிவால் துயருறும் பெற்றோர், உறவினர்கள், மன்னார் மாவட்ட JRS பணியாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவரின் பிரிவின் துயரில் யாழ்.மாவட்ட JRS பணியாளர்களும் இணைகின்றோம். இவரின் ஆன்ம இளைப் பாற்றிற்காக [illegible] றோம்.

(66271) **JRS யாழ்.மாவட்ட இணைப்பாளர், பணியாளர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சிறிது காலம் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமைபுரிந்தவரும், எமது பணிமனையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் **வே.புலேந்திரன்** அவர்களின் உறவினருமாகிய

**ஸ்ரீகாந்தன் நிஷாந்தன்**

அவர்கள் 25.09.2007 அன்று திடீர் மரண மடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும்,
பணிமனை உத்தியோகத்தர்களும்.

**உதவி அரசாங்க அதிபர் பணிமனை,**
**காரைநகர்.** (66275)

## கண்ணீர் அஞ்சலி



அருட்தந்தை
**பாக்கிய ரஞ்சித்**

*திருமதி நீக்கிலாஸ்பிள்ளையின் மகனும் பாக்கிய றெஜினோல்டின் சகோதரனுமாகிய அருட்தந்தை பாக்கிய ரஞ்சித் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அருட்தந்தையை இழந்து தவிக்கும் குடும்பத்துக்கு ஆறுதலும் அமைதியும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*மன்னார்.* **ரஞ்சன் குடும்பம்.**
**0232222582** (66273)

## சரஸ்வதி வித்தியாலயத்திற்கு மின் இணைப்பு

சாவகச்சேரி சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்திற்கு மின் இணைப்பு கிடைத்துள்ளது.

வித்தியாலயத்திற்கு மின் இணைப்பு வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் ந. ஸ்ரீகாந்தா பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து 50ஆயிரம் ரூபாவினை ஒதுக்கீடு செய்திருந்தார்.

வித்தியாலயத்திற்குப் பொருத்தப்பட்ட மின் இணைப்பினை தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வைபவ ரீதியாக அண்மையில் ஆரம்பித்து வைத்ததாக வித்தியாலய அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன் தெரிவித்தார். (202-207)

## உரிய ஆவணம் இல்லாத மோட்டார் சைக்கிள்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

உரிய ஆவணங்கள் இல்லாத மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாவற்குழி படைமுகாமின் சோதனைச் சாவடியில் உரிய ஆவணங்களின்றி காணப்பட்டபோது அவற்றினைப் படையினர் கைப்பற்றி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

மோட்டார் சைக்கிள்கள் வைத்திருந்தவர்களை பொலிஸார் விசாரணை செய்தபோது உரிமைதொடர்பான எந்தவொரு ஆவணமும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டதால் மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைத்தனர். (203-207)

### ஆனைக்கோட்டையில் நெல் விதைப்பு ஆரம்பம்

நவாலி,செப்.28

நவாலி, ஆனைக்கோட்டை, கல்லுண்டாய் பகுதிகளில் அண்மையில் பெய்த பெருமழையைத் தொடர்ந்து பெரும்போக நெல்விதைப்பு [illegible] ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (202-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த புனித யோண் பொஸ்கோ மாணவியான

**செல்வி யன்ஸ்ரின் நிறோஜினி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரிற்கு கற்பித்து ஊக்கம் கொடுத்த அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

*66, ராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (66258) *வாழ்த்துவோர்:* **பெற்றோர், உறவினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007இல் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ள யா/நெல்லியடி மெ.மி.பாடசாலை மாணவனும் வதிரி மகிழ்ராஜன்-ராதை தம்பதியரின் தவப்புதல்வனுமாகிய

**செல்வன் மதன்ராஜ்**

கல்வியில் மேலும் பல சிறப்புக்கள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துவோர்:

*தாத்தா- மகேஸ்வரன், பாட்டி- இரத்தினாம்பாள்,*
*மாமா, மாமி - நிமல் மாதினி (கனடா),*
*அத்தான் - அபிரன் (கனடா),*
*தங்கை - மதுமிதா.*

"இரத்தினதாரகை",
வதிரி. (66265)

## இடமாற்றம்

CAPITAL ALLIANCE
*The preferred partner in Capital Markets*

நாடு முழுவதும் உள்ள அனைத்து பங்குதாரரையும் உரிய சந்தை நேரத்தில் ஒன்றிணைத்து On Line முறையில் யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக பங்கு பரிவர்த்தனைச் சேவையை தனது வாடிக்கையாளருக்காக *398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்னும் முகவரியில் வழங்கி வந்த CAPITAL ALLIANCE HOLDING COMPANY எதிர்வரும் 01.10.2007 திங்கட்கிழமை முதல் Laxan Plaza, 356B, *கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்* எனும் முகவரியில் தனது சேவையை வழங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களிற்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

*குறிப்பு:*
மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட முதலாம்தர வியாபாரியான CAPITAL ALLIANCE HOLDING COMPANYஇல் மத்திய வங்கியினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல் (T.Bill) திறைசேரி முறிகள் (T.Bond), REPO, RREPO என்பவற்றையும் கொள்வனவு செய்ய முடியும்.

T.P.: 021 459 1111
Fax: 021 459 1111

Manager,
Capital alliance holding company.
(66268)

## மரண அறிவித்தல்கள்



### கந்தவனம் சுந்தரலிங்கம் (ஆசிரியர்)

அல்வாய் மேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தவனம் சுந்தரலிங்கம் 25.09.2007 செவ்வாய்க்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - பறுவதபத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிவக்கொழுந்து - பவளம்மா தம்பதியரின் மருமகனும் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயந்தி (ஆசிரியை, வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), செந்தூரன் (பயிற்சி உத்தியோகத்தர், திருகோணமலை), சுகந்தி (ஆசிரியை, யாழ்.மத்திய கல்லூரி), சங்கரன் (ஆசிரியர், மாத்தளை இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவேந்திரனின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.மு.: "வவுனில்", அல்வாய் மேற்கு, திக்கம்.
த.மு.: இல.50, பண்ணை வீதி, உப்புவெளி, திருகோணமலை.
T.P.: 0777 222406,
077 3738861, 077 9905883

தகவல்: **குடும்பத்தினர்.** (66261)

### சுப்பையா இரத்தினசபாபதி (அப்பாதுரை)

(முன்னாள் உறுப்பினர், கொக்குவில் கிராம சபை)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இரத்தினசபாபதி (அப்பாதுரை) அவர்கள் நேற்று (27.09.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (ஆசை), சுத்தானந்தன் (ஸ்ரீ), சந்திரலீலா (பபி), சந்திரமோகனா (மானா), சத்தியானந்தன் (ராசன்), சந்திரகாந்தா (ராசினி), கிருபானந்தன் (ஈசன், பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரவசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி, சாவித்திரி, செல்வராசா (ஸ்ரீமுருகன் இரும்பகம், கோண்டாவில் மேற்கு), பத்மநாதன், தர்மலதா (ஆசிரியை, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கோபிநாதன் (இளவரசி பாட்டா, சுன்னாகம்), குமுதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் உமாசுதன், கணேசுதன் (ஆஸ்திரேலியா), பிரமிலா, கஜிந்தா, கிருஷ்ணமேனன், சாந்தமேனன், ராஜி பிரபா, பிரசாத் (லண்டன்), தனுசா (கனடா), ஜெகனி, ஜெனனி, ரிஷோகரன் (டோகா), தசாகரன், டல்சினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜீவாகரன், அபிஷேக் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2007) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (66269)

*சீக்கோ லேன், உப்புமடச்சந்தி,*
*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*

தகவல்: **இராஜேஸ்வரி** *(மனைவி),*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எது பயங்கரவாதம்?

*''பயங்கரவாதம் எங்கிருந்தாலும் பயங்கரவாதமே. அதில் நல்லதென ஒன்றுமே இல்லை.''*

- உலகின், சர்வதேச சமூகத்தின், அதி உயர் அவையான ஐக்கிய நாடுகள் சபையின் மையத்தில் நின்று கொண்டு இலங்கை அரசின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முழக்கமிட்ட வார்த்தைகள் இவை.

ஈழத் தமிழர்கள் உட்பட எவருமே ஆட்சேபனை தெரிவிக்க முடியாத - நியாயமான - அற்புதமான - நுட்பமான - வார்த்தைகள் இவை. இந்த வாசகத்தைக் கேள்விக்கு உட்படுத்தும் நியாயம் ஏதும் எத்தரப்பிடமும் இல்லை என்றாலும், அந்த வாசகத்தின் ஊடுபொருளாக விளங்கும் அம்சம் குறித்து - அதில் பொதிந்து கிடக்கும் குழப்பகரமான கருத்துக் குறித்து - கேள்வி எழுப்பும் நியாயம் தமிழர்களுக்கு இருப்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டியிருக்கின்றது.

பயங்கரவாதம் எங்கிருந்தாலும் பயங்கரவாதம்தான். ஆனால் எது பயங்கரவாதம் என்பதுதான் இன்று முக்கிய கேள்வியாகின்றது.

'பயங்கரரவாதம்' என்ற சொற்றொடர் ஊடாக - அதிபர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட சிங்கள தேசமும் ஏனையோரும் குறிக்கும் பொருளின் அர்த்தம் யாது? அது எதனைக் குறிக்கின்றது என்பதே சிந்தனைக்குரிய வினாவாகின்றது.

'பயங்கரவாதத்தை அழித்தொழித்தல்' என்ற பெயரில் - சட்டத்தினதும் நியாயத்தினதும் ஆட்சி தொடர்வதாகக் கூறிக்கொண்டு - இறைமையுள்ள ஓர் அரசின் நடவடிக்கையாக வெளிப்படுத்தப்படும் - 'அரச பயங்கரவாதத்தை'யும் உள்ளடக்கித்தான் தமது கருத்தை சர்வதேச சமூகத்தின் முன்பாக ஜனாதிபதி மஹிந்தர் இப்படி முன்வைத்தாரா, அப்படித்தான் அவரது உரையை உலகு புரிந்துகொண்டதா என்ற கேள்வியே தமிழர் தரப்பில் இருந்து எழுகின்றது.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாநிலத்தை தமது தாயகமாகக் கொண்டு அங்கு பூர்வீக வரலாற்றுத் தொன்மையுடன் தொடர்ச்சியாக வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள். அந்தத் தாயகத்தில் தமது வரலாற்றுரீதியான பூர்வீக உரிமையை நிலைநிறுத்தி, ஸ்திரப்படுத்தும் தமது நீதியான - நியாயமான - அபிலாஷையை எட்டுவதற்காக அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமது அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளும் சுயநிர்ணயத் தகைமையும், தமது தாயக பூமியின் இறைமையையும் மறுத்து நிற்கின்ற சிங்கள தேசம், அந்த மறுப்பின் உச்சமாக அரச ஒடுக்குமுறையைத் தமிழ் மக்களின் சமுதாயம் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.

இந்தத் துன்பியல் நிகழ்வுப் போக்கே இலங்கைத் தீவின் கடந்த அரை நூற்றாண்டு கால சரித்திரமாக விரிந்து செல்வதை உலகம் இன்று நன்கு உணரத் தலைப்பட்டு விட்டது.

தமது வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் நியாயமான அரசியல் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு அஹிம்சை வழியில் - காந்திய நெறியில் - அறவழிப்பட்ட பாதையில் - தாங்கள் தொடுத்த போராட்டங்கள் தொடர்ந்து வந்த கொழும்பு அரசுகளால் ஆயுதப்பலாத்கார முறையில் அடக்கப்பட்டதன் விளைவாக - அரச ஒடுக்குமுறையும், அடிமைப்படுத்தலும் எல்லை மீறிய கட்டத்தில் - தமிழரின் உரிமைக்கான போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பியது.

பொறுத்துப் பொறுத்து பொறுமையிழந்த ஈழத் தமிழ் மக்களின் பொங்குணர்வாகவே - அவர்களின் அரசியல் அபிலாஷைகளின் ஆவேச வெளிப்பாடாகவே - சுயநிர்ணயத்துக்கான தமிழரின் எழுச்சி தமிழர் தாயகம் எங்கும் பெரும் ஆயுத வன்முறைப் புயலாகக் கிளர்ந்து வீசுகின்றது.

அரச அடக்கு முறையும், அதற்கு எதிரான ஆயுத எதிர்ப்புரட்சியுமாக இலங்கைத் தீவில் வெடித்த வன்முறையில், அடக்கப்பட்ட இனத்தின் வெகுண்டெழுந்த போராட்டம்'பயங்கரவாத' மாகவும், ஒரு தேசிய இனத்தை அடக்கியாளும் எத்தனமாக மேற்கொள்ளப்படும் 'அரச பயங்கரவாதம்' இறைமையுள்ள அரசின் சட்டபூர்வமான - 'பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை'யாகவும் அர்த்தப்படுத்தப்படும் விதத்திலும் இந்தத் தீவில் அரங்கேறுகின்றது.

நாமாகப் போராடி, நமது அரசியல் தலைவிதியை நாமே தீர்மானிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்வதே 'சுய நிர்ணய உரிமை.' அந்த உரிமைக்காகப் போராடவேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தை உலக அமைப்பு, ஈழத் தமிழர்கள் மீது சுமத்தி நிற்கின்றது. அந்தப் போராட்டத்தை நோக்கிய இலட்சியத்தில் ஒன்றுபட்ட தேசமாக - தேசியமாக - ஈழத் தமிழினம் எழுந்து நிற்கின்றது.

இந்தப் பின்புலத்திலேயே தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை உலக அரங்கிலே 'பயங்கரவாதமாக' அதிபர் ராஜபக்ஷ சித்திரிக்கின்றார். இருந்தாலும் அந்தப் பயங்கரவாதத்தை அடக்கும் பெயரில் அவரது அரசும் படைகளும் கட்டவிழ்த்து விட்டிருக்கும் 'அரச பயங்கரவாதத்தையும்' சர்வதேசம் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டதை உணர்ந்து, அவர்அச்சப்படுவதை, அவரது உரையே நமக்குக் காட்டிக் கொடுக்கின்றது.

இலங்கை அரசினதும், அரசுப் படைகளினதும் மோசமான மனித உரிமை மீறல்கள் இன்று ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் முதல் சகல சர்வதேச அரங்குகளிலும் பேசப்பட்டு எதிரொலிக்கும் முக்கிய விடயமாகும் அளவுக்கு அம்பலமாகி விட்டன. மூடிய திரைகளுக்குப் பின்னால் அரங்கேறிய காணாமற் போதல்களும், கடத்தல்களும், சித்திரவதைகளும், படுகொலைகளும் அரச அராஜக ஆட்சியின் அங்கங்களே என்பது இன்று புலனாகத் தொடங்கிவிட்டன. அவையே இன்று சர்வதேச மட்டத்தில் பேசும் முக்கிய கருப்பொருள்களாகி விட்டன.

அதனால்தான் சர்வதேசத்தைப் பார்த்து, உங்களைப் போல ஏகாதிபத்தியத்தைக் கட்டியெழுப்புவதற்காகவோ அல்லது வர்த்தக ஆதிக்கத்துக்காகவோ அல்லது மத அடையாளத்துக்காகவோ அப்பாவி மக்களை வாட்டி வதைத்தவர்கள் அல்லர் நாங்கள் என்று ஐ.நா. சபையில் நின்று மஹிந்தர் தமக்குத் தாமே நற்சான்றிதழ் அளிக்கின்றார்.

அரசியல் லாபம் கருதி அரசுகளைப் பழிவாங்குவதற்கு மனித உரிமைகளை ஆயுதமாகப் பயன்படுத்துவது உசிதமானதல்ல என்றும் உலகுக்கு தத்துவம் போதிக்கின்றார் அவர்.

அவர் அங்கு குறிப்பிட்டமை போல அமெரிக்காவிலிருந்து பிரிட்டன் வரை மேற்குலகக் காலனித்துவம் ஒரு காலத்தில் - ஏன் இப்போதும் கூட - தமது ஏகாதிபத்தியத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும், வர்த்தக ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும், மதத்தைப் பரப்புவதற்காகவும் அப்பாவி மக்களைக் கொன்றொழித்தன, கொன்றொழிக்கின்றன என்பது உண்மைதான்.

ஆனால் அதற்காக, இலங்கையில் ஒரு சிறுபான்மை இனத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் மிக மோசமான அரச ஒடுக்குமுறையை - இனவழிப்பை - அதற்கான அரச பயங்கரவாதத்தை - 'மனித உரிமை மீறல்கள்' என்ற அடிப்படையில் தட்டிக் கேட்கும் உரிமையை சர்வதேச சமூகம் இழந்துவிட்டதாக மஹிந்தர் கருதிவிடக்கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கருத்து ஒன்று இங்கு கவனிக்கத்தக்கதாகிறது.

*''பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான - தீர்க்கமான - வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழியே நிகழும் நியாயமான அரசியல் போராட்டங்களும் பயங்கரவாதமாகத் திரிபுபடுத்தப்படுகின்றன.*

*''இந்த வகையில் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதச் சேறு பூசப்படுகின்றது.*

*''பயங்கரவாதத்துக்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடி மறைக்கப்படுகின்றது.*

*''எனினும் அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர்கள் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகின்றது. இந்தத் துர்ப்பாக்கிய நிலை எமது விடுதலை இயக்கத்தின் மீதும் ஏற்பட்டிருக்கின்றது.''* - என்கிறார் பிரபாகரன். இந்தத் துர்ப்பாக்கிய நிலையையே தனது ஐ.நா. உரைக்கு சாத கமாகப் பயன்படுத்தியிருக்கிறார் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ. அதுதான் உண்மை.

## ஐ.தே.க. போல குத்துக்கரணம் அடிக்க மாட்டோம்!

# புலிகளின் பயங்கரவாதத்தைத் தோற்கடித்து அதிகாரப் பகிர்வு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு

### அரசுத் தரப்பில் அறிவிப்பு

கொழும்பு,செப். 28

புலிகளின் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் அதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வுகாண்பது என்ற நிலைப்பாட்டில் அரசு தொடர்ந்தும் உறுதியாகவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சமஷ்டி மூலமே தீர்வு என்று கூறிக் கொண்டு - அதனடிப்படையிலேயே புலிகளுடன் பேச்சும் நடத்திவிட்டு - இப்போது அந்நிலைப்பாட்டில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி மாறுவதுபோல், அரசு ஒருபோதும் தனது நிலைப்பாட்டிலிருந்து மாறாது என்றும் அவர் கூறினார்.

அரசதகவல்திணைக்களத்தில்நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு சமஷ்டி மூலமே தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்று கூறிய ஐ.தே.கட்சி இப்போது அந்நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளது.

சமஷ்டியை அடிப்படையாக வைத்துத்தான் ஐ.தே.கட்சி புலிகளுடன் ஒஸ்லோவில் பேச்சு நடத்தியது. சமஷ்டி மூலம் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க இணங்கி - அதனையே தனது நிலைப்பாடாகக் கொண்டு செயற்பட்டபின் - இப்போது அதிலிருந்து அக்கட்சி விலகியுள்ளது.

புலிகள் பலமிழந்துபோகும் இந்த நிலையில் அக்கட்சி தனது நிலைப்பாட்டை மாற்றியிருப்பதானது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அக்கட்சி சமஷ்டித் தீர்வை முன்வைக்க முனைந்தது தமிழ் மக்களுக்காக அல்ல, புலிகளுக்குத்தான். புலிகள் இப்போது பலமிழந்து போவதால் தனது நிலைப்பாட்டையே ஐ.தே.கட்சி மாற்றியுள்ளது.

*அரசு தனது நிலைப்பாட்டை மாற்றாது*

அரசில் இணைந்துள்ள சில அரசியல் கட்சிகளைத் தன்பக்கம் இழுத்துப் போடவே ஐ.தே.கட்சி இந்த நாடகத்தை நடத்துகின்றது. ஆனால், அரசு ஒரு போதும் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறாது. புலிகளின் பயங்கரவாதத்தைத் தோற்கடித்துக்கொண்டு, தமிழர்களின் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலமே தீர்வை முன்வைக்க அரசு முயன்றவண்ணமுள்ளது - என்றார். (சி)

# மக்கள் மீதான கிளைமோர் தாக்குதல்களுக்கு தமிழர் கூட்டமைப்புக் கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 28

குடாநாட்டில் அண்மைக் காலமாகத் தொடரும் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான புலிகளின் கிளைமோர் குண்டுத் தாக்குதல்களை, நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

இது தொடர்பாக நேற்று தமிழர் கூட்டமைப்பினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கிளைமோர் குண்டுத் தாக்குதல்களில் அநியாயமாக கொல்லப்பட்ட எம் தமிழ் உறவுகளின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதல்களில் சாவகச்சேரி, கச்சேரியடி, சத்திரச் சந்தி, வடமராட்சி ஆகிய இடங்களிலும் சங்கானையில் சாரதா ஆசிரியை மற்றும் நிசாந்தன், இன்று வியாழக்கிழமை, சுன்னாகம் சந்தையிலும் எமது உறவுகளான அப்பாவி மர்ணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கல்விமான்கள் மற்றும் சமூகசேவையாளர்கள் என்று மொத்தமாக 18 பேர் கொலை செய்யப்பட்டும் 43 பேர் காயப்படுத்தப்பட்டுமுள்ளனர்.

இதுபோன்ற அப்பாவி பொதுமக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிடும் பயங்கரவாத செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துங்கள்.

தமிழ்மக்களின் உண்மையான உணர்வுகளைப் புரிந்து அவர்களை நிம்மதியாக வாழவிடுங்கள்.

இனியும் இவ்வாறான அப்பாவித் தமிழ மக்கள் மீதான தாக்குதல் தொடருவதை நாம் அனுமதிக்கமாட்டோம். எனவே புலிகளுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் பகிரங்கமாக எச்சரிக்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவ ரீதியில் வென்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் பலத்தின் ஊடாகத்தான் எங்களுடைய இனத்தை தலைநிமிர வைத்திருக்க முடியும். 1995ஆம் ஆண்டு 6 லட்சம் மக்கள் யாழ்ப்பாணத்திருந்து ஒரேயடியாக வெளியேற்றப்பட்ட போது உலகம் எந்தவொரு கருத்தையும் சொல்லவில்லை. ஆனால் நாங்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தை நோக்கி 2000ஆம் ஆண்டு போனபோது இந்த உலகம் எல்லா இடங்களிலிருந்தும் அரசுக்கு வாரி இறைத்துக் கொடுத்தது.

அந்த மமதையில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு முன்னெடுத்த போது முதுகெலும்பு உடைக்கப்பட்டது.

அவர்கள் தம்முடைய முறிந்த முதுகெலும்பை ஒட்ட வைப்பதற்காகத்தான் இந்தப் பேச்சுக்களுக்கு ஊடாக சர்வதேசத் தலையீடு, பேச்சு என்ற வலைக்குள் எம்மை இழுத்துச் சென்றார்கள்.

#### அடிபணிய வைக்க அனுமதிக்க மாட்டோம்

நாங்கள் ஒன்றை மட்டும் இறுக்கமாகவும், தெளிவாகவும் சொல்லுகிறோம். நாங்கள் எந்தக் காலத்திலும் இராணுவ ரீதியில் எங்களுடைய மண்ணை அடிபணிய வைக்க அனுமதிக்கமாட்டோம். தோல்வியினுடைய விளிம்புக்கு எங்களை இட்டுச் செல்வதோ, ஆயுதமுனையில் இராணுவரீதியாக எங்களை வெற்றிகொண்டு எங்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணலாம், பேச்சு நடத்தலாம் என்று அவர்கள் கருதுவதோ ஒரு காலமுமே நடவாத காரியங்கள். அதற்கு எச்சமயத்திலும் விடுதலைப்புலிகள் அனுமதிக்கமாட்டார்கள்.

திலீபனுக்கும் எங்களுடைய தளபதிகளுக்கும் தலைவர் ஊட்டியது ஓர்மம். அதுதான் நீர் அருந்தாமல் கூட 12 நாள்கள் நோன்பிருந்து, தன்னுடைய உடலைத் தியாகி திலீபன் உருக்கியழித்தான்.

எங்களுடைய இனத்தின் விடுதலைக்காக - இனத்தினுடைய, சுபீட்சத்திற்காக - தலைவர் இந்த 30 ஆண்டுகால போராட்ட வரலாற்றில் பல வெற்றிகளையும், பல திருப்பு முனைகளையும் ஏற்படுத்தியவர்.

1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதுக்குடியிருப்பிற்கு அருகில் இருக்கின்ற ஒட்டிசுட்டான் பகுதியில் படைகள் வந்து நின்றபோது, எல்லோரிடமும் ஓர் அச்சம் இருந்தது.

புதுக்குடியிருப்பா அல்லது வட்டக்கச்சியா, எது இனி விழும்? ஏ-9 நெடுஞ்சாலையால் இப்படி இடங்களை அரசு படைகள் பிடித்துக்கொண்டு போனால் எங்களுடைய நிலைமை என்ன?

அந்த நிலைமையைத் தலை கீழாக மாற்றியமைத்தவர் எங்களுடைய தலைவர்.

தலைவருடைய கரங்களைப் வலுப்படுத்தி, இந்த விடுதலைப் போராட்டத்தை வீச்சாக்கவேண்டியது எல்லோருடைய கடமையாகும். எங்களுடைய தலைவர் தீர்க்க தரிசனமும், மதிநுட்பமும் நிறைந்த ஒருவர்.

அவருடைய நாள்களினுள் எங்களுடைய விடுதலைப் போராட்டத்தை - எங்களுடைய விடுதலையை - நாங்கள் வென்றெடுக்கவேண்டும். அதற்காகத்தான் 'வீட்டுக்கு ஒருவர் நாட்டுக்கு' என்ற கருத்தோடு படை திரட்டல் நடவடிக்கையை மும்முரமாக செய்து கொண்டிருக்கிறோம்.

அவரின் தீர்க்க தரிசனம், மதிநுட்பம் என்பவற்றுக்கு ஒரு சான்றைக் கூறுகிறேன்.

1988ஆம் ஆண்டு தலைவரைச் சந்திக்கச் சென்றபோது, மணலாற்றுக் காட்டில் 'ஒப்பிரேசன் செக் மேட்' நடவடிக்கை நடந்து கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் கையில் குண்டு அடிபட்டு, தலைவருடைய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டேன். தலைவர் இருந்த இடத்திற்கு பக்கத்திலேயே - தலைவருக்கு அருகாமையில் - இருந்து கொண்டிருந்து என்னை தலைவர் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்.

அந்த சிகிச்சையை அண்டை நாட்டில்தான் பெற்றுக்கொண்டோம்.

ஆனால், இன்றைக்கு அதைவிட மிக மோசமான நிலையில் கடலில் விபத்தைச் சந்தித்த போதும் கூட, குறிப்பிட்ட நாள்களில் உங்களிடம் கருத்துக்களைச் சொல்லக்கூடிய அளவுக்கு மீண்டும் வந்திருக்கிறேன் என்று சொன்னால், அதற்கு நமது தலைவர் தீர்க்க தரிசனத்தோடு உருவாக்கிய மருத்துவத்துறை தான் காரணம்.

1988ஆம் ஆண்டு ஒரே ஒரு மருத்துவத் துறையோடு மணலாற்றுக் காட்டுக்குள்ளே நிலை கொண்டிருந்தது தலைவருடைய வைத்தியப் பணிமனை.

இன்றைக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எவ்வளவு விபத்துக்களை நம்மவர்கள் சந்தித்தாலும், எவ்வளவு போராளிகள் விழுப்புண்களை அடைந்தாலும் அவர்களை மீண்டும் களமுனைக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலைக்கு வைத்தியம் செய்து குணமடைய வைக்கும் நிலைமையை ஏற்படுத்தித் தந்தவர் நமது தலைவர். அது, அவரது தீர்க்கதரிசனத்தால் உருவாக்கப்பட்ட மருத்துவத்துறைதான்.

#### இன்று நேற்று மேற்கொள்ளவில்லை

அரசு விசமத்தனமான பிரசாரத்தை இன்று நேற்று மேற்கொள்ளவில்லை. அது காலம் காலமாக உளவியல் ரீதியாக சிங்கள தேசத்தையும், உலகத்தையும் ஏதோ ஒரு புரட்டுப்புரட்டி, அப்படியாவது ஆத்ம திருப்தியைக் காணலாம் என்ற நோக்கில் பிரசாரத்தைச் செய்து வருகின்றது.

அரசின் பிரசாரங்கள் எல்லாவற்றுக்கும் நாங்கள் பதில் அளித்துக்கொண்டு இருப்போம் என்றால், நாளாந்தம் ஒரு மறுதலிப்பை விடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

உங்களைவிட்டுப் புலம்பெயர்ந்து வாழுகின்ற எங்களுடைய உறவுகள்தான் குழம்பியிருக்கிறார்கள்.

வீதியில் எங்களுடைய வாகனம் 100 மீற்றர் வேகத்தில் போகும் போது 'கியரை' மாற்றாமல் வெட்டினால் வாகனம் பிரளும். அதே மாதிரித்தான கடலிலும் அது பொருந்தும்.

வேகப்படகுகளைப் பரீட்சார்த்தமாக ஓடிப்பார்த்தபோது, வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் படகு ஒன்று வந்து மோதியது. என்னுடைய மகன் இறந்தது உண்மை. அவரோடு கூட நின்ற என்னுடைய போராளி ஒருவர் இறந்தது உண்மை. இரண்டு, மூன்று போராளிகள் விழுப்புண் அடைந்ததும் உண்மை. இதுதான் நடந்தது.

ஆனால், ஒன்றை மட்டும் மிகத் தெளிவாகவும், இறுக்கமாகவும், சொல்லுகிறோம்.

தலைவருடைய நாள்களினுள் எங்களுடைய இனத்தினுடைய விடுதலையை பேச்சு நடத்தித் பெறமுடியாது, இராணுவ நடவடிக்கை மூலம்தான் எங்களுடைய விடுதலையைப் பெறமுடியும்.

அதற்காகத்தான் 'வீட்டுக்கு ஒருவர் நாட்டுக்கு!'

கண்டிப்பாக உங்களுடைய பிள்ளைகளைப் பங்களிப்புச் செய்யுங்கள். மிக விரைவாக இராணுவ ரீதியான வெற்றிகளை அது தேடித்தரும் - என சேனல் சூசை தனது உரையில் மேலும் தெரிவித்தார். (சி)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 12 | சனிக்கிழமை 29.09.2007 |
| திதி : திருதியை | முன்னிரவு 06.59 |
| நட்சத்திரம் : | அச்சுவினி முற்பகல் 11.45 |
| சுபநேரம் | : 03.02 - 04.32 |
| ராகுகாலம் | : 09.02 - 10.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ஹெய்ம் - ஜனாதிபதி மஹிந்த நேற்று நியூயோர்க்கில் சந்திப்பு

கொழும்பு, செப். 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், நோர்வே நாட்டின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடை யிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று நியூ யோர்க் நக ரில் இடம்பெற்றுள்ளது.

ஐ.நா.சபையின் 62 ஆவதுபொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அங்கு சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு பல்வேறு நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து வருகின்றார். அந்த வரிசையில் எரிக் சொல்ஹெய்மையும் அவர் சந்தித்திருக்கிறார்.

இலங்கையில் அனைத்துக் கட்சிப் பிர முகர்கள் குழுவினால் முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகள் மூலம் இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இந்தச் சந்திப்பில் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

"நாட்டிற்கு சரியான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க மிகுந்த அர்ப்பணிப்புடன் இருக்கிறேன்." - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தச் சந்திப்பின் போது எரிக் சொல்ஹெய்மிடம் கூறியிருக்கிறார் என்றும் கூறப்பட்டது.

இதற்குப் பதிலளித்த எரிக் சொல்ஹெய்ம் "இலங்கை மக்களிடையே நிரந்தர சமாதானம் மலர்வதைக் காண்பதே எமது எதிர்பார்ப்பாகும்." - என்று தெரிவித்தார் எனவும் கூறப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹான்ஸன் போவரும் கலந்து கொண்டார் என்று ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்தது. (சி)

## 2 மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

சரணடைந்த கொடிகாமத்தைச் சேர்ந்த 19 வயது மாணவன் கடந்த 21ஆம் திகதி முதல் காணாமற் போயிருந்தார் என்று அவரது பெற்றோர் தெரிவித்தனர். (அ-1-50)

## யாழ். ஆஸ்பத்திரி...,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பு நிறுத் தப்பட்டுள்ளது - என்று வைத்திய அதிகா ரிகள் சங்கத்தின் செயலாளர் எஸ். குமார வேள் தெரிவித்தார். (அ- 1)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடை ஒன்றையும் நடத்தி வந்தார் எனவும் அத்துடன், அவர் ஓட்டோ சாரதி என்றும் கூறப்பட்டது.

இவரது சடலம்சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப் பட்டது.

தும்பளையில் தொலைத் தொடர்பு நிலையத்துக்கு சென்ற பூபால பிள்ளை சுபாஸ்கரன் (வயது - 29) என்ற இளைஞன் நேற்றுக் காலை 7.30 மணியளவில் அந்த நிலையத்துக்கு முன்பாக வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வேலணை மேற்கைச் சேர்ந்த இவர் தும்பளையில் உறவினர் வீட்டில் தங்கியிருந்து, கடை ஒன்றில் பணியாற்றிவந்தார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் க. அரியநாய கம் விசாரணைகளை மேற்கொண்டார். (அ-1-50-203-207-15-78-160-155-226)

## சுன்னாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரியான மயிலிட்டியைச் சேர்ந்த நாகமுத்து இராசையா (வயது - 70), சுன்னாகம் பஸ் நிலையத்தில் தனியார் பஸ் நேரக்கணிப் பாளராகக் கடமையாற்றும் - பூநாறிமடம், கொக்குவிலைச் சேர்ந்த - சீனியன் கணேசராசா (வயது - 47) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காமல் குமாரசாமி விசாலாட்சி (வயது - 60) என்ற பெண் மரணமானார்.

இந்தக் கிளைமோர்த் தாக்குதலில் காய மடைந்த பொதுமக்கள் 18 பேர் சிகிச்சைக்காகத் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

தனியார் பஸ் ஒன்றும் பொலிஸ் வாகனமும் இந்தக் கிளைமோர்த்தாக்குதலில் சேதத்துக்குள்ளாகின எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் உயிரிழந்தவர்களின் சடலங்களைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இத்தாக்குதலின்போது காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள 18 பொதுமக்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

ஜே.ஜெகதீஸ்வரன்(வயது - 16), எஸ். ஜீவன்(வயது - 34),கே. நளாயினி(வயது - 45 - அளவெட்டி), கே. காசிப்பிள்ளை (வயது - 90 - சுன்னாகம்),எஸ். நந்தகுமார், ஏ. தமிழ்ச்செல்வன் (வயது - 35 - அளவெட்டி மேற்கு), எம். அமுதராணி (வயது - 42 - சுழிபுரம்),ப.பொன்னையா (வயது - 63), சி. குணமணிதேவி (வயது - 50), எம். கமலதாஸ் (வயது - 48),ஜே.நாகேஸ்வரி (வயது - 46), ஜே.சர்மிளா (வயது - 16), ஜே.சீதாலட்சுமி (வயது - 57), ஏ.காந்திமதி (வயது - 43), க.ஞானேஸ்வரன் (வயது - 43 - ஊரெழு), இ.ஸ்ரீ சண்முகராஜா (வயது - 24 - சுன்னாகம்), சி. அருமைதுரை (வயது - 48 - உடுவில்).

இத்தாக்குதலையடுத்து சுன்னாகம் கந்தரோடைப்பகுதியில்பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப் பட்டது. அதன் போது பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு நேற்று மாலைவரை பஸ்கள் செல்ல அனுமதிக் கப்படவில்லை.

சுன்னாகத்தில் மாலை 4 மணியுடன் சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டு வெறிச் சோடிக் காணப் பட்டது. (அ-1-50-15-68-78)

## சித்திபெய்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ "எங்கோ இருந்து வந்த இராணுவத்தினர்" என்று உங்களால் புனைப்பெயரால் வர்ணிக்கப்படும் நாம் உங்களின் அன்புச் செல்வங்களின் கல்வி நிலை சீர்குலையக் கூடாது என்பதற்காக மேல் குறிப்பிடப்பட்ட தடைகளை உடைத்தெறிந்து மாணவச் செல்வங்களின் கல்வி நிலையை சரிவரச் செயற்படுத்த இறுக்கமான செயற்றிட்டங்களை அமுல்படுத்தினோம். இதன் பிரதி பலனை மாணவச் செல்வங்கள் இன்று அனுபவிக்கின்றனர். எதிர்காலத்திலும் அனுபவிப்பர் என்பதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

✱ அண்மைக்காலங்களில் இராணுவத்தினர் கல்விச் செயற்பாட்டை சீராக செயற்படுத்த தேவையான சூழலை ஏற்படுத்தியமையால் உங்களுக்கு சுதந்திரமாக கல்வி கற்க கூடியதாக இருந்தது. அதனால் இப் பெரும் வெற்றியை அடைய முடிந்தது.

மாணவச் செல்வங்களே!

✱ தமிழரின் ஏகபிரதிநிதிகள் எனக் கூறும் புலிகளும் அவர்களின் வால்களும் உங்களின் கல்வி நிலையை சீர் குலைக்க வெடிப் பொருள்களும் குண்டுகளும் துப்பாக்கிகளும் கொடுத்து அல்லது மறைத்து வைக்கச் சொல்லி உங்களையும் புலி உறுப்பினராக அல்லது வால்கலாக பாதுகாப்பு படையினருக்கு காட்டுவதற்காக முயற்சித்தனர். ஏன் அவர்கள் நீங்கள் மாணவர்கள் என்று நினைக்கவில்லை?

✱ இருப்பினும் இவர்கள் இவ்வாறு செயற்படுகையில் அதனை முறியடிப்பதற்காக ஒரு சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் தங்கள் உயிர்களை துச்சம் என மதித்து செயற்பட்டனர். வேறு சில சந்தர்ப்பங் களில் உயிரைக் கூட தியாகம் செய்தனர். இது உங்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கேயன்றி இங்கு எவ்வித இனவாதமோ, அரசியலோ, சுயநலமோ கலந்திருக்கவில்லை என்பதை நீங்கள் இன்று நன்கு உணர்ந்திருப்பீர்கள்.

✱ நீங்களும் எங்களின் அன்புப் பிள்ளைகளைப் போன்றே நாம் கருதுகின்றோம். இன்று நீங்கள் அடைந்த வெற்றி எங்களின் உள்ளத்தை மெய்சிலிர்க்க செய்கின்றது. எங்களின் முயற்சி வீண் போகவில்லை என்பதை நன்கு உணர்கிறோம். உங்களின் வெற்றி உங்களை மட்டுமன்றி பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் இத் தமிழ் மண்ணையும் மட்டுமன்றி தாய்நாட்டைக் கூட பெருமைப் படுத்துகின்றது என்பதை நினைவில் வைத்து எதிர்காலத்தில் எவ்வித தடைகளுக்கும் அஞ்சாது கல்வியை தொடருங்கள் இது உங்களின் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் கனவை நனவாக்க வழி வகுக்கும் என்பது நிச்சயம்.

## அனைத்துக்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும், அனைவரையும் ஓர் இணக்கப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும்.

யுத்தம் ஏற்பட்ட நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்த நாடுகளிலெல்லாம் எடுத்த எடுப்பில் சமாதானம் வந்துவிடவில்லை. பத்து, இருபது வருடங்கள் தாண்டித்தான் சமாதானம் வந்துள்ளது.

எமது நாட்டிலும் அதே நிலைதான். ஒரு புறம் பயங்கரவாதத்தை ஒழித்துக்கொண்டு மறுபுறம் சமாதானத்தை ஏற்படுத்த அரசு முயன்று வருகிறது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை நிய மித்து அதனூடாக ஒரு தீர்வு யோசனையைப் பெறுவதே அனைவரும் அறிந்த அரசின் திட்டம். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு அனைத்துக் கட்சிகளும் தங்களது யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளன. அந்த யோசனைகளின் அடிப்படையில் இறுதித் தீர்வு யோசனையைத் தயாரிப்பதில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

அம்முயற்சி ஓரிரு நாள்களுக்குள் வெற்றியளிக்கக் கூடியதல்ல. எத்தனை நாட்கள் செல்லும்,எத்தனை மாதங்கள் செல்லும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது.

இந்த சமாதான முயற்சியில் பல மாற்றங்கள் ஏற்படலாம். சில வேளை சர்வகட்சிப் பிரதிநிதிள் குழுவைக் கலைத்துவிட்டு வேறு குழுவை நியமிக்கும் நிலையும் ஏற்படலாம். சமாதான முயற்சியில் எந்தெந்த மாற்றங்கள், எப்போது ஏற்படும் என்று முற்கூட்டியே உறுதியாகக் கூறமுடியாது - என்றார். (சி)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் சின்னையா

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் கல்லவேம்படி, சுழிபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சின்னையா நேற்று (27.09.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் தபோதரன் (வவுனியா), கணேசரத்தினம், இன்பமதன் (நுவரெலியா), விமலாதேவி (நுவரெலியா), நிர்மலாதேவி (நுவரெலியா), அனுசா (நுவரெலியா), காலஞ்சென்றவர்களான கெங்காதேவி, துரைரத்தினம் ஆகியோரின் தந்தையும், சுதாகரன், சிவலிங்கம், செல்வநாயகம், மகேந்திரகுமார், ஞானேஸ்வரி, பத்மாதேவி, பிரியா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற பாலசிங்கம் (MPM), ராசரத்தினம் (M.R.S. சங்கானை), நவரத்தினம் (இந்தியா), சரஸ்வதி, (கனடா), இராசம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.09.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் விளாவெளி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. ராசரத்தினம் (M.R.S.)
(சகோதரர்).

*தொட்டிலடி,*
*சங்கானை*

### கோபாலபிள்ளை சுபாஸ்கரன் (சுபாஸ்)



வேலணை மேற்கைப், பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளைசுபாஸ்கரன்நேற்று (27.09.2007) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கோபாலபிள்ளை - பகீரதி தம்பதியரின் அன்பு மகனும் சியாமளா, மஞ்சுளா (ஆசிரியை, கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்), சுபாஜினி (2ஆம் வருடம், விஞ்ஞானபீடம்), குகன் (மாணவன், தொழிற் பயிற்சி நிறுவனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜனார்த்தனனின் (கணக்காளர்) மைத்துனரும் லினுசங்கரன், தனுசங்கரன், சஜீவன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11/1, திருவள்ளுவர் சாலை,*
*அரசடி வீதி, கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(66291)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லத்துரை சதானந்தன் (நயினாதீவு)



நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சதானந்தன் நேற்று (27.09.2007) வியாழக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் கனகம்மா (நடுவகாடு) தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயராணியின் (சுவிஸ்) அன்புக் கணவரும் இலங்கேஸ்வரி (லண்டன்), இலங்கேஸ்வரன் (சுவிஸ்), சதானந்தி (சுவிஸ்), சிவசக்தி (சுவிஸ்), விஜயராம் (கனடா), கவிதா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேஸ்வரன் (லண்டன்), விஜயபாரதி (சுவிஸ்), கோபாலு (சுவிஸ்), சிவரஞ்சன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும் ஓங்காரநாதன் (லண்டன்), மாசிலாமணி (வவுனியா), திருவாசகம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நேபிநாதன் (கதிர்காமம்), கமலேஸ்வரன் (பிரான்ஸ்), மோகனா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் சிவநாதன் (ஓய்வு பெற்ற அதிபர், ஆஸ்திரேலியா), லோகநாதன் (செயலாளர் காரைநகர் பிரதேச சபை), சிவாகரன் (ஜேர்மனி), சியாமளாதேவி (கனடா), சிதம்பரேஸ்வரி (பிரான்ஸ்), பரமேஸ்வரி (பிரான்ஸ்), பிரேமா (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*67, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

(66290)

தகவல்:
இரா. லோகநாதன்
(மைத்துனர்).


**தேவை**

எழுதுவினைஞர் தேவை.
நேரில் வருகை தரவும்.
28.09.2007 வெள்ளி
3.30 - 5.00
ஐடியல் இன்ஸ்ரிரியூட்
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

**பிறைற்றின் கல்வி நிலையம்**

சாவகச்சேரி
G.A.Q., B.A. Part I, II
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2007 திங்கள் 4 p.m.
✱ தமிழ்: தர்மராஜா
✱ இந்து நாகரிகம் : சுதமதி
✱ வரலாறு : சுஜீகரன்.

வணிகக்கல்வி
A/L 2008
பகுதி II
முயற்சியாண்மை
Sat., Sun. 8 - 9 am.
A/L 2009
Sat., Sun. 9 - 10 am.
ஆரம்பம் : 29.09.2007 (Sat.)
V.K. ரவீகரன்
B.Com., Dip in Edu.
NAVALAR
Jaffna.

**தவறிவிட்டது**

சந்தைவீதி, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த குமாரவேலு பத்மநாதன் என்பவரது தேசிய அ.அட்டை (471512460V) சாரதி அனுமதிப்பத்திரம் (DL373554), மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் (500 - 1150) என்பன 19.09.2007 அன்று மானிப்பாய்க்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுந்தரசன், மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
29.09.07 (Sat)
Diploma in Computerized Accounting
Diploma in DTP & Graphics Design
Diploma in Computer Hardware


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org